(6 pages) **Reg. No. : ....**

Code No. : 22014 **Sub. Code : RITL 41/ BITL 41**

B.A/B.Sc. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2012.

Fourth Semester

Part I — Tamil

Paper —IV — செய்யுள், இலக்கணம், உரைநடை, நாடகம், இலக்கிய வரலாறு

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்க.

1. "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு" என்னும் பாடல் வரி இடம் பெறுவது.

   (அ) முல்லைப்பாட்டு (ஆ) குறிஞ்சிப்பாட்டு

   (இ) நெடுநல்வாடை (ஈ) பட்டினப்பாலை

2. "வேம்பின் பைங்காயென் தோழி தரினே தேம்பூங்கட்டி ______________" எனும் பாடலைப் பாடியவர்

   (அ) மிளைக்கந்தனார் (ஆ) பரணர்

   (இ) மருதனிள நாகனார் (ஈ) கூடலூர் கிழார்

3. 'ஈமெயில்' என்னும் ஆங்கிலச் சொல்லிற்கான தமிழ் வடிவம்

   (அ) தகவல் (ஆ) மின்னஞ்சல்

   (இ) தொலைபேசி (ஈ) அலைபேசி

4. 'ஊறுகாய்' என்பதின் இலக்கணக்குறிப்பு

   (அ) வினைத்தொகை (ஆ) வினைமுற்று

   (இ) உம்மைத்தொகை (ஈ) உவமைத்தொகை

5. "ஓடைப்புல்" என்னும் நாவலாசிரியர்

   (அ) சி.ஆர். ரவீந்திரன் (ஆ) அகிலன்

   (இ) கல்கி (ஈ) வ.ரா.

6. கனாக்காலம் - இது ஒரு

   (அ) கவிதைத் தொகுப்பு

   (ஆ) சிறுகதைத் தொகுப்பு

   (இ) கட்டுரைத் தொகுப்பு

   (ஈ) நாவல்

7. வட்டியூர் ஜமீன்தாராக இடம் பெறுபவர்

(அ) வேதநாயகம்

(ஆ) வேதாசல முதலியார்

(இ) மாதவையா

(ஈ) இராஜம் ஐயர்

8. வேலைக்காரி ஒரு

(அ) சமூக நாடகம்

(ஆ) ஆன்மிக நாடகம்

(இ) அறிவியல் நாடகம்

(ஈ) அரசியல் நாடகம்

9. எட்டுத்தொகையுள் இடம் பெறும் புற நூல்

(அ) பதிற்றுப்பத்து (ஆ) கலித்தொகை

(இ) நெடுநல்வாடை (ஈ) பட்டினப்பாலை

10. மலைபடுகடாம் என்பது

(அ) பொருநர் ஆற்றுப்படை

(ஆ) சிறுபாணாற்றுப்படை

(இ) கூத்தராற்றுப்படை

(ஈ) திருமுருகாற்றுப்படை

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) வாடையால் வந்த துன்பம் நெடுநல்வாடையில் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

(அல்லது)

(ஆ) "முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் ......" உணர்த்தும் கருத்தினைப் புலப்படுத்துக.

12. (அ) வஞ்சித்திணை-விளக்குக.

(அல்லது)

(ஆ) முதற்பொருள், கருப்பொருள் பற்றி எழுதுக.

13. (அ) 'இலக்கியவீதி'யில் இடம் பெறும் வாழ்வியல் மதிப்புகள் - குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கிய வீதி சுட்டும் வட்டாரக்கலை - குறிப்புத்தருக.

14. (அ) வேதாசல முதலியார்-கதாபாத்திரம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'வேலைக்காரி' நாடகத்தின் மொழிநடை பற்றி எடுத்துரைக்க.

15. (அ) முச்சங்கங்கள் பற்றிக் குறிப்பெழுதுக.

(அல்லது)

(ஆ) மதுரைக் காஞ்சி பற்றி எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களில் கட்டுரை வடிவில் விடை தருக.

16. (அ) நெடுநல்வாடை வாயிலாக அறியலாகும் பழந்தமிழரின் நாகரிகம் பற்றிக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) அகநானூறு, குறிஞ்சிப்பாட்டு – இவை உணர்த்தும் செய்திகளை எடுத்துரைக்க.

17. (அ) செய்வினை, செயப்பாட்டு வினை பற்றி விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புறப்பொருள் பற்றி விளக்குக.

18. (அ) 'இலக்கிய வீதி' என்னும் நூலில் இடம்பெறும் புறநானூற்றுப் புலவர்களின் ஆளுமை என்னும் கட்டுரைக் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) 'ஔவையார் பாடல்களில் அறியலாகும் தமிழர் பண்பாடு' என்னும் கட்டுரை உணர்த்தும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. (அ) வேலைக்காரி நாடகத்தின் தலைப்புப் பொருத்தம் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) வேலைக்காரி நாடகத்தின் சமூக சிந்தனை பற்றி விவரிக்க.

20. (அ) முச்சங்க வரலாறு பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க காலம் ஒரு பொற்காலம் - விளக்குக.

———————